# இராமநாதபுரம் மாவட்டம்.

## காலாண்டுத் தேர்வு - செப்டம்பர் 2024

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு - வேதியியல் விடைக்குறிப்பு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

| Q No | பதில் | Q.No | பதில் |
|---|---|---|---|
| 1 | ஈ) அ மற்றும் இ | 9 | ஆ) 107.2 நிமிடங்கள் |
| 2 | அ) Al < Ga < In < Tl | 10 | ஆ) களி – வெண்ணெய் |
| 3 | ஆ) 2 | 11 | ஈ) எத்தன்-1,2-டைஆல் |
| 4 | ஆ) $Mn^{2+}$ | 12 | அ) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும். |
| 5 | ஈ) 6 | 13 | Mere attempt |
| 6 | இ) மூலக்கூறு திண்மம் | 14 | ஈ) D – குளுக்கோஸ் |
| 7 | ஆ) கிளர்வு ஆற்றல் | 15 | அ) பாலிஅமைடு |
| 8 | அ) 9 | | |

## பகுதி – II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடைளிக்கவும். (வினா எண் 24 கட்டாயமாக விடையளிக்கவும்) 6 x 2= 12

**16. எலிங்கம் வரைபடத்தின் வரம்புகள் யாவை?**

★ ஒரு வினை எவ்வளவு வேகத்தில் நிகழும் மற்றும் துணை வினைகள் நிகழ்வதற்கான சாத்தியங்கள் பற்றிய விவரங்களை தரவில்லை.

★ வினைபடுபொருள்கள், விளைபொருளுடன் வேதிச் சமநிலையில் இருப்பதாக கருதி $\Delta G$ மதிப்புகள் வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இது எல்லா நிபந்தனைகளுக்கும் உண்மையல்ல.

**17. ஹேலஜன் இடைச்சேர்மங்களின் பண்புகள் யாவை?** (ஏதேனும் 2 மட்டும்)

- மைய அணுவானது பெரியதாக இருக்க வேண்டும்.
- இரு ஹேலஜன்களுக்கிடையே மட்டும் உருவாகிறது.
- இரண்டிற்கு மேற்பட்ட வெவ்வேறு விதமான ஹேலஜன்கள் இணைந்து உருவாவதில்லை.
- புளூரின் மிகச் சிறியதனால் மைய அணுவாக செயல்படாது.
- சுய அயனியாதலுக்கு உட்படுகின்றன.
- வலிமையான ஆக்சிஜனேற்றிகளாகும்.

**18. அனிலீன் பிரீடல் கிராப்ட் வினைக்கு உட்படுவதில்லை. ஏன்?**

- அனிலீன் காரத் தன்மை உடையது.
- இது தனித்த இரட்டை எலக்ட்ரான்களை லூயி அமிலங்களுக்கு வழங்கி சேர்க்கை விளை பொருளைத் தருவதால் எலக்ட்ரான் கவர் பதிலீட்டு வினை நிகழாது.

**19. அயனிப் படிகங்கள் ஏன் கடினமாகவும், உடையும் தன்மையையும் பெற்றுள்ளன?**

- நேரயனிகள் மற்றும் எதிரயனிகள் வலிமையான நிலைமின்னியல் கவர்ச்சி விசையால் பிணைக்கப்பட்டுள்ளன. இப்படிகங்களிலுள்ள உட்கூறு அயனிகளின் இட அமைவை மாற்றியமைக்க மிக வலிமையான புறவிசை தேவைப்படுவதால் கடினமாகவும், உடையும் தன்மை உடையதாகவும் உள்ளன.

**20. அர்ஹீனியஸ் சமன்பாட்டை எழுதி அதில் இடம்பெற்றுள்ளவற்றை விளக்குக?**

$$K = Ae^{-Ea/RT}$$

K = வினைவேக மாறிலி. A = அதிர்வு காரணி. Ea = கிளர்வுறு ஆற்றல். R = வாயு மாறிலி. T = வெப்பநிலை.

**21. கோல்ராஷ் விதியைக் கூறு?**

அளவில்லா நீர்த்தலில் ஒரு மின்பகுளியின் மோலார் கடத்துதிறனின் மதிப்பானது அதன் பகுதிக்கூறு அயனிகளின் மோலார் கடத்துதிறனின் கூடுதலுக்குச் சமம்.

**22. டிண்டால் விளைவு பற்றி விளக்குக?**

கூழ்மத்துகள்கள் வழியே ஒளிக் கற்றையை செலுத்தினால் ஒளியின் தடம் புலப்படும். கூழ்மத் துகள்கள் ஒளி ஆற்றலை உறிஞ்சி அனைத்து திசைகளிலும் உமிழ்வதே இதற்குக் காரணமாகும்.

**23. யுரோட்ரோபின் என்றால் என்ன? அதன் பயன் யாது?**

யுரோட்ரோபின் என்பது ஹெக்சா மெத்திலீன் டெட்ரமீன் ஆகும்.

பயன்கள்: 1. சிறுநீரக தொற்று நோய்க்கு மருந்தாக

2. RDX எனும் வெடிபொருள் தயாரிக்க. (ஏதேனும் 1 மட்டும்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| 24 | D (+) குளுக்கோஸ் அமைப்பை வரைக? |
|---|---|
| |  |

## பகுதி – III

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடைளிக்கவும். (வினா எண் 33 கட்டாயம் விடையளிக்கவும்) 6 x 3 = 18**

**25 கனிமம் மற்றும் தாது ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் யாவை?**

| கனிமம் | தாது |
|---|---|
| ★ இயற்கையில் பூமியிலிருந்து எடுக்கப்பட்ட பொருளானது ஒரு உலோகத்தை அதன் தனித்த நிலையிலோ அல்லது சேர்ம நிலைகளிலோ கொண்டிருப்பின் அப்பொருள் கனிமம் எனப்படும். எ.கா பாக்சைட், சைனாக்களி | ★ கனிமங்களிலிருந்து எளிதாகவும், லாபகரமாகவும் உலோகத்தை பிரித்தெடுக்க இயலுமாயின் அத்தகைய கனிமங்கள் தாதுக்கள் எனப்படும். எ.கா பாக்சைட் (அலுமினியம்) |
| ★ அனைத்து கனிமங்களும் தாதுக்கள் அல்ல. | ★ அனைத்து தாதுக்களும் கனிமங்களாகும். |

**26 சிலிக்கோன்களின் பயன்களைக் கூறுக?**

உயவுப் பொருளாகவும், வெற்றிடப் பம்புகள், உயர் வெப்பநிலை எண்ணெய் தொட்டிகள், மின்காப்பு பொருளாகவும், சூரிய ஒளி ஈரத்தால் பாதிக்காத பெயிண்ட் மற்றும் நீர் ஒட்டா ஆடைகள் தயாரிக்க. (ஏதேனும் 3 மட்டும்)

**27 இரட்டை உப்புகள் மற்றும் அணைவுச் சேர்மங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?**

| இரட்டை உப்புகள் | அணைவுச் சேர்மங்கள் |
|---|---|
| பிரிகையுற்று தங்கள் தனித்தன்மையை இழக்கின்றன. | தனித்தன்மையை இழப்பதில்லை. |
| கரைசலில் உட்கூறு அயனிகளாக பிரிகின்றன. | பிரிகையடைவதில்லை. |
| நேர் மற்றும் எதிர் அயனிகள் உள்ளன. | எளிய மற்றும் அணைவு அயனிகள்உள்ளன. |
| எ.கா: மோர்ஸ் உப்பு | எ.கா: $K_4[Fe(CN)_6]$ |

**28 போலி முதல்வகை வினையை ஒரு எ.கா. உடன் விளக்குக.**

ஒரு இரண்டாம் வகை வினையில் ஏதேனும் ஒரு வினைபடு பொருளின் செறிவை மிக அதிக அளவில் எடுத்துக் கொள்வதால் முதல் வகை வினையாக மாறுவது போலி முதல்வகை வினை எனப்படும்.
எ.கா : அமிலத்தின் முன்னிலையில் எஸ்டரை நீராற்பகுத்தல்.

**29 பிராங்கல் குறைபாடு பற்றி விளக்குக? (5)**

- ➢ அயனியானது படிக அணிக்கோவைத் தளத்தில் இடம் பெறாமல் இடைச்செருகல் நிலையில் அமைவதால்இக்குறைபாடு ஏற்படுகிறது.
- ➢ நேரயனி மற்றும் எதிரயனிகளின் உருவளவில் அதிக வேறுபாடு காணப்படும். (or) படிக அடர்த்தியில் பாதிப்பு ஏற்படுவதில்லை.
- ➢ எ.கா சில்வர் புரோமைடு




**30**




(X) அசிட்டோன்

(Y) அசிட்டிக் அமிலம்

**31 ஆல்டால் குறுக்க வினையை விளக்குக?**




அசிட்டால்டிஹைடு ஆல்டால்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**32** **இரப்பரின் வல்கையாக்கல் (அல்லது) உரனூட்டல் பற்றி குறிப்பு வரைக?**

- ★ இயற்கை இரப்பருடன் 3 – 5% சல்பரை சேர்த்து 100 – $150^0$ c வெப்பப்படுத்தும் போது குறுக்கப் பிணைக்கப்படுகிறது.
- ★ 1 முதல் 3% சல்பைரைக் கொண்ட இரப்பர் மிருதுவாகவும், நீளும் தன்மையுடையது.
- ★ 3 முதல் 10% சல்பைரைக் கொண்ட இரப்பர் கடினமாகவும் நெகிழும் தன்மையுடையது.

**33** **$0.1M$ $CH_3COOH$ கரைசலின் pH மதிப்பை கணக்கிடுக. அசிட்டிக் அமிலத்தின் பிரிகை மாறிலி மதிப்பு $1.8 X 10^{-5}$**

$$[H^+] = \sqrt{k_a \ X \ C}$$
$$= \sqrt{1.8 X 10^{-5} \ X \ 0.1}$$
$$= 1.34 \ X \ 10^{-3} \ M$$
$$pH = -\log_{10} [H^+]$$
$$= -\log_{10} 1.34 \ X \ 10^{-3}$$
$$= 3 - \log 1.34$$
$$= 3 - 0.1271 = 2.87$$

## பகுதி – IV

**34 அ** **i) புலத்தூய்மையாக்கல் முறையை ஒரு எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்? (3)**

- ★ இம்முறையானது பின்னபடிகமாக்கல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.
- ★ தண்டின் ஒரு முனையை நகர்ந்து செல்லும் தூண்டு வெப்பப்படுத்தியைப் பயன்படுத்தி வெப்பப்படுத்தும் போது அப்பகுதியில் உள்ள உலோகம் உருகுகிறது.
- ★ மறுமுனை நோக்கி மெதுவாக வெப்பப்படுத்தியை நகர்த்தும் போது தூய உலோகம் படிகமாகிறது.
- ★ மேலும் வெப்பப்படுத்தியை நகர்த்தினால் மாசுக்களை கொண்டுள்ள உருகிய நிலை பகுதியானது அதனுடன் சேர்ந்து நகர்கிறது.
- ★ இச்செயல்முறையானது பலமுறை மீண்டும் ஒரே திசையில் நிகழ்த்தப்பட்டு தூய உலோகம் பெறப்படுகிறது.
- ★ உலோகம் ஆக்ஸிஜனேற்றமடைவதைத் தடுக்க இச்செயல்முறையானது மந்த வாயுச் சூழலில் நிகழ்த்தப்படுகிறது.

எ.கா: ஜெர்மானியம் (அ) சிலிகன் (அ) காலியம் (அ) Ge (அ) Si (அ) Ga (அ) குறைகடத்திகள்.

**ii) மந்த இணை விளைவு என்றால் என்ன? (2)**

இடைநிலைத் தனிமங்களைத் தொடர்ந்து வரும் p-தொகுதியின் கனமான தனிமங்களின் வெளிக்கூட்டிலுள்ள s எலக்ட்ரான்கள் மந்தத் தன்மை கொண்டு வேதிப்பிணைப்பில் ஈடுபடுவதில்லை.

.(அல்லது)

**ஆ** **i) p-தொகுதி தனிமங்களில் முதல் தனிமத்தின் முரண்பட்ட பண்புகள் பற்றி சிறுகுறிப்பு வரைக? (2)**

- ➢ சிறிய உருவளவு
- ➢ அதிக அயனியாக்கும் என்தால்பி மற்றும் எலக்ட்ரான் கவர் திறன்
- ➢ இணைதிறன் கூட்டில் d ஆர்பிட்டால்கள் இல்லாதிருத்தல்

**ii) லாந்தனாய்டு குறுக்கம் என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை? (3)**

**லாந்தனாய்டு குறுக்கம்:** 4f தொடரில் சீரியம் முதல் லுட்டீசியம் வரை செல்லும் போது அணு எண் அதிகரிக்க அதன் அணு மற்றும் அயனி ஆரங்கள் குறைவது.

**விளைவு:**

- ➢ $ce^{3+}$ லிருந்து $Lu^{3+}$ நோக்கிச் செல்லும் போது $Ln^{3+}$ அயனிகளின் காரத்தன்மை குறைகிறது.
- ➢ லாந்தனாய்டுகளின் வேதிப் பண்புகள் ஏறத்தாழ ஒத்துள்ளன.
- ➢ 2ஆம் மற்றும் 3ஆம் இடைநிலை வரிசைத் தனிமங்கள் அதிகளவில் ஒன்றுக்கொன்று ஒத்துள்ளன.

**35 அ** **வெர்னர் கொள்கையின் கோட்பாடுகளைக் கூறுக? (5)**

- ➢ ஒவ்வொரு அணைவுச்சேர்மத்தின் மைய உலோக அயனியானது இருவிதமான இணைதிறன்களைப் பெற்றுள்ளது. அவை i) முதன்மை இணைதிறன் ii) இரண்டாம் நிலை இணைதிறன்.

| S. No | முதன்மை இணைதிறன் | இரண்டாம் நிலை இணைதிறன் |
|---|---|---|
| 1 | மைய உலோக அயனியின் ஆக்சிஜனேற்ற எணணைக் குறிக்கிறது. | அணைவு எண்ணைக் குறிக்கிறது. |
| 2 | எதிர்மின் அயனிகளால் நிறைவு செய்யப்படுகிறது. | நேர் (அ) எதிர்மின் அயனி (அ) நடுநிலை மூலக்கூறுகளால் நிறைவு செய்யப்படுகிறது. |
| 3 | இத்தொகுதிகள் அமைந்துள்ள வெளிக் கோளம் அயனிக் கோளமாகும். | இத்தொகுதிகள் அமைந்துள்ள உட்க் கோளம் அணைவுக் கோளமாகும். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | 4 | தொகுதிகள் மைய உலோகத்துடன் வலுவற்ற நிலையில் பிணைந்திருப்பதால் அயனிகளாக பிரிகின்றன. | தொகுதிகள் மைய உலோகத்துடன் வலிமையாக பிணைந்திருப்பதால் அயனிகளாக பிரிவதில்லை.. |
| | 5 | திசைப் பண்பு இல்லை. | திசைப் பண்பைப் பெற்றுள்ளது. இதில் உள்ள தொகுதிகள் முப்பரிமாண வெளியில் ஒரு குறித்த திசையில் அமைந்து ஒரு குறிப்பிட்ட வடிவத்தை தருகிறது. எ.கா: இரண்டாம் இணைதிறன் 6 எனில் அந்த அணைவு சேர்மம் எண்முகி வடிவத்தை பெற்றிருக்கும். |

(அல்லது)

**ஆ**

**i) bcc அலகு கூட்டில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக? (2)**

bcc அலகு கூட்டில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை $= \frac{Nc}{8} + \frac{Nb}{1} = \frac{8}{8} + \frac{1}{1} = 1 + 1 = 2$

**ii) மூலக்கூறு படிகங்கள் என்றால் என்ன? அவற்றின் வகைகளை எ.கா உடன் விளக்குக? (3)**

இப்படிகங்களில் காணப்படும் நடுநிலை மூலக்கூறுகள் வலிமை குறைந்த வாண்டர்வால்ஸ்கவர்ச்சி விசையால் பிணைக்கப்பட்டுள்ளன. மென்மையானவை. மின்கடத்தும் தன்மையற்றது.

எ.கா: நாப்தலீன் (அ) திட கார்பன்-டை-ஆக்சைடு (அ) பனிக்கட்டி

**36 அ**

**முதல் வகை வினைக்கான தொகைப்படுத்தப்பட்ட வேகவிதியை வருவி? (5)**

A → விளை பொருள்

$$\text{வினைவேகம்} = K[A]^1$$

$$\frac{-d[A]}{dt} = K[A]^1$$

$$\frac{-d[A]}{[A]} = Kdt$$

$$\int_{[A_0]}^{[A]} \frac{-d[A]}{[A]} = K\int_0^t dt$$

$$-ln[A] - (-ln[A_0] = K(t-0)$$

$$ln\left(\frac{[A_0]}{[A]}\right) = Kt$$

$$2.303 \log\left(\frac{[A_0]}{[A]}\right) = Kt$$

$$K = \frac{2.303}{t}\log\left(\frac{[A_0]}{[A]}\right)$$

(அல்லது)

**ஆ**

**ஆஸ்வால்ட் நீர்த்தல் விதிக்கான சமன்பாட்டை வருவிக்கவும்? (5)**

$$CH_3COOH \rightleftharpoons CH_3COO^- + H^+$$

$$K_a = \frac{[H^+][CH_3\,COO^-]}{[CH_3\,COOH]}$$

$$K_a = \frac{(\alpha C)(\alpha C)}{(1-\alpha)C}$$

$$K_a = \frac{\alpha^2 C}{(1-\alpha)}$$

$$\therefore\ \alpha = \sqrt{\frac{K_a}{C}} \quad (or)\quad [H^+] = \sqrt{k_a C}$$

**37 அ**

**i) தன்னிழப்பு பாதுகாப்பு (எதிர்முனை பாதுகாப்பு) பற்றி குறிப்பு வரைக? (2)**

- தன்னிழப்பு நேர்மின்முனை - ஜிங்க்
- எதிர்மின்முனை - இரும்பு
- ஜிங்க் அரித்தலுக்கு உட்பட்டு இரும்பு பாதுகாக்கப்படுகிறது..

**ii) இயற்புறப்பரப்பு கவர்தல் - வேதிப்புறப்பரப்பு கவர்தல் வேறுபடுத்துக? (3)**

| இயற்புறப்பரப்பு கவர்தல் | வேதிப்புறப்பரப்பு கவர்தல் |
|---|---|
| கணப்பொழுதில் நிகழ்கிறது | மெதுவாக நிகழ்கிறது |
| மீள் தன்மையுடையது | மீள் தன்மையற்றது |
| எலக்ட்ரான் இடமாற்றம் இல்லை | எலக்ட்ரான் இடமாற்றம் உண்டு |
| பல அடுக்கு உருவாகிறது | ஒற்றை அடுக்கு உருவாகிறது |
| பரப்புக் கவர்தல் வெப்பம் குறைவு | பரப்புக் கவர்தல் வெப்பம் அதிகம் |
| அழுத்தத்தை அதிகரித்தால் பரப்பு கவர்தல் அதிகமாகும் | அழுத்தத்தினால் எத்தகைய பாதிப்பும் இல்லை |
| வெப்பநிலையை அதிகரித்தால் பரப்பு கவர்தல் குறையும் | வெப்பநிலையை அதிகரித்தால் பரப்பு கவர்தல் முதலில் அதிகரித்து பிறகு குறைகிறது |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

ஆ குறிப்பு வரைக :

i) கன்னிசாரோ வினை: (2½)




ii) காம்பெர்க் வினை: (2½)




38 அ

## குளுக்கோஸ் அமைப்பை விவரி (5)

| சோதனை | காண்பன | அறிவன |
|---|---|---|
| தனிமங்களின் எடை சதவீதம் | $C_6H_{12}O_6$ | மூலக்கூறு வாய்பாடு கண்டறியப்படுகிறது. |
| P/HI உடன் வினை | ஹெக்சேனைத் தருகிறது. | 6 கார்பன் அணுக்கள் கிளை இல்லாமல் உள்ளது. |
| நீருடன் வினை | நடுநிலைக் கரைசலைத் தருகிறது. | – COOH தொகுதி இல்லை |
| பிரிடின் முன்னிலையில் அசிட்டிக் அமில நீரிலியுடன் வினை | பென்டா அசிட்டேட்டைத் தருகிறது. | 5 – OHதொகுதி உள்ளது |
| $NH_2OH$ மற்றும் HCN உடன் வினை | முறையே ஆக்சைம் மற்றும் சயனோஹைட்ரின் சேர்மங்களைத் தருகிறது. | கார்பனைல் தொகுதி உள்ளது. |
| டாலன்ஸ் காரணி மற்றும் ஃபெலிங் கரைசலுடன் வினை | முறையே இரண்டு கரைசல்களையும் ஒடுக்குகிறது, | ஆல்டிஹைடு தொகுதி உள்ளது. |
| புரோமின் நீருடன் வினை | குளுக்கோனிக் அமிலமாக ஆக்சிஜனேற்றமடைகிறது. | ஆல்டிஹைடு தொகுதி உள்ளது. |
| அடர் நைட்ரிக் அமிலத்துடன் வினை | குளுக்காரிக் அமிலத்தை (சாக்ரிக் அமிலம்) தருகிறது | ஒரு முனையில் ஓரிணைய ஆல்கஹால் தொகுதி உள்ளது. |

CHO
|
H – C – OH
|
H– C – OH
|
H – C – OH
|
H – C – OH
|
$CH_2OH$



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

(அல்லது)

ஆ i) ஓரிணைய, ஈரிணைய மற்றும் மூவிணைய அமீன்களை எவ்வாறு வேறுபடுத்துவாய் ? (3)

| காரணி | ஓரிணைய அமீன் | ஈரிணைய அமீன் | மூவிணைய அமீன் |
|---|---|---|---|
| 1, நைட்ரஸ் அமிலத்துடன் வினை | ஆல்கஹாலைத் தருகிறது. | N – நைட்ரசோ அமீனைத் தருகிறது. | உப்புகள் உண்டாகிறது |
| 2, $CHCl_3$ / ஆல்கஹால் KOH உடன் வினை | கார்பைலமீனைத் தருகிறது. | வினை இல்லை. | வினை இல்லை. |
| 3,அசிட்டைல் குளோரைடுடன் வினை | N –ஆல்கைல் அசிட்டமைடு உண்டாகிறது. | N,N –டை ஆல்கைல் அசிட்டமைடு உண்டாகிறது. | வினை இல்லை. |
| 4, $CS_2$ மற்றும் $HgCl_2$ உடன் வினை | ஆல்கைல் ஐசோதயோசயனேட் உண்டாகிறது. | வினை இல்லை | வினை இல்லை. |
| 5,அறை வெப்பநிலையில் டைஎத்தில் ஆக்ஸலேட்டுடன் வினை | திண்ம நிலை டை ஆல்கைல் ஆக்ஸமைடைத் தருகிறது. | திரவ N,N –டை ஆல்கைல் எஸ்டரைத் தருகிறது. | வினை இல்லை. |
| 6, ஆல்கைல் ஹேலைடுடன் வினை | மூன்று மூலக்கூறுடன் வினைபுரிந்து நான்கிணைய அம்மோனியம் உப்பை தருகிறது. | இரண்டு மூலக்கூறுடன் வினைபுரிந்து நான்கிணைய அம்மோனியம் உப்பை தருகிறது. | ஒரு மூலக்கூறுடன் வினைபுரிந்து நான்கிணைய அம்மோனியம் உப்பை தருகிறது. |

(ஏதேனும் 3 மட்டும்)

ii) அமில நீக்கிகள் என்றால் என்ன? (2)

வயிற்றில் உண்டாகும் அமிலத் தன்மையை நடுநிலையாக்குபவை.

$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com